4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 170/2020 நாள்: 03.03.2026 வா.சா.3 – லட்சுமி**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

வாதி எனது கணவர் என்றால் சரிதான். வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா சொத்து சம்பந்தப்பட்ட எந்த ஆவணத்திலும் நான் சாட்சியாகவோ, தரப்பினராகவோ இல்லை என்றால் சரிதான். எனக்கும், வாதிக்கும் 2005 ம் ஆண்டு திருமணம் நடந்தது. 07.03.1984 ல் பாகபிரிவினை நடந்துள்ளது, அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, கேள்விதான் பட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் பாகபிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் எனது கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர் தனியாகவும், பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு நேரடியாக தெரியாது, கேள்விதான் பட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலம் எனது கணவர் சொல்லி தயார் செய்யப்பட்டது. 1984 ம் வருட பாகபிரிவினை பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன். மேற்படி பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் ராமனுஜமும், அவரது சகோதரரும் பாகபிரிவினை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை பத்திரம் ஏற்படும் சமயத்தில் எனது கணவருக்கு என்ன வயதிருக்கும் என்று எனக்கு சரியாக தெரியாது. 1984 ல் எனது கணவருக்கு 20 வயதிருக்கலாம் என்றால் சரிதான். 1984 ம்வருட பாகபிரிவினை

பத்திரத்தை பொறுத்து எனது கணவரோ, நானோ ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். 1984 ல் ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் எனது மாமனாருக்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். எனது மாமனார் 14.05.2015 ல் காலமானார். எனது மாமனார் காலமாகும் வரை எனது கணவர் பாகம் கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் தனியார் சுகர் மில்லில் AGM ஆக வேலை பார்த்து வருகிறார். தாவா சொத்தில் பிரதிவாதி தென்னை பயிரிட்டுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி தாவா சொத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தென்னங்கன்றுகளை பயிரிட்டுள்ளார். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனது கணவர் தனியாகவும், பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை பிரதிவாதி தனியாகவும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எதிராக எனது கணவர் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்போ, பின்போ காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு நேரடியாகவும், எனது கணவர் சொல்லியும் எனக்கு தெரியும். நான் இந்த முதல் விசாரணையில் சொல்லியுள்ள உயில் ஆவணத்தை நான் நேரயாக பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தின் சரத்துக்கள் பற்றியோ, யார் யாருக்கு எழுதி கொடுத்துள்ளார்கள் என்ற விவரத்தை என்னால் சொல்ல முடியாது என்றால் சாட்சி எனது கணவர் சொல்லி எனக்கு தெரியும் என்று கூறுகிறார். எனது கணவர் தற்போது கர்நாடகா மாநிலத்தில் வேலை பார்க்கிறார். அதற்கு முன்பு திருச்சி, அரியலூர், சாந்தமங்களம் ஆகிய இடங்களில் வேலை பார்த்தார். எனது கணவர் உடுமலைபேட்டை அருகில் உள்ள சர்க்கரை ஆலையில் ஒரு போதும் வேலை பார்க்கவில்லை என்றால் சரிதான், 2007 ம் ஆண்டு முதல் நான் எனது கணவருடன் வேலை பார்க்கும் இடத்திற்கு சென்று

வசிக்கவில்லை, எனது மாமனார், மாமியாருடன் நானும், எனது மகனும் வல்லக்குண்டாபுரத்தில் தான் வசிக்கிறோம், எனது கணவர் வந்து செல்வார் என்று சாட்சி கூறுகிறார். 2013 ம் ஆண்டு எனது கணவரின் பெற்றோர்கள் எங்களுடன் வல்லக்குண்டாபுரத்தில் தான் வசித்தார்கள். 2013 ம் ஆண்டு உயில் ஆவணத்தை பற்றி எங்களுக்கு 2019 ம் ஆண்டு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தான் தெரியும். எனது மாமானருக்கு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை யாருக்கு வேண்டுமானலும் உயில் எழுதி வைக்க உரிமையுண்டு என்றால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். தாவா சொத்து சுமார் 6 ஏக்கர் விஸ்தீரணமுடையது. தாவா சொத்து ஒரு ஏக்கர் தற்போது ரூ.30 லட்சம் மதிப்புடையது. மேற்படி உயில் ஆவணம் எழுதும் சமயத்தில், எனது மாமனார் உடல்நிலையும், மனநிலையும் சரியில்லாமல் இருந்தார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நாங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2013 ம் வருடம் எனது மாமனாரை பிரதிவாதி அழைத்து சென்ற விவரம் எனக்கு தெரியும், எந்த தேதியில் அழைத்து சென்றார்கள் என்று எனக்கு குறிப்பாக ஞாபகம் இல்லை. எனது கணவர் தனியார் சர்க்கரை ஆலையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்ததால் அவர் ஒரு போதும் அவருடைய பெற்றோரை கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் ராமனுஜம் அவருக்கு பாத்தியப்பட்ட பங்கை தான் பிரதிவாதிக்கு உயில் ஆவணம் மூலம் எழுதி கொடுத்துள்ளார் என்றும், அது சட்டப்படி செல்லும் என்றும், அதில் ஆட்சேபனை தெரிவிக்க எனக்கும் எனது கணவருக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா சொத்தில் பங்கு பாத்தியம் உண்டு என்றால் சரிதான். தாவா சொத்தை அவர் அவர்களுக்கு உள்ள பங்கை தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றும், தாவா சொத்தில் நாங்கள் கூட்டு

சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் வாதியின் மனைவி என்பதால் வாதி சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.03 15:50:07 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.